தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993, ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை

சித்திரை 7, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு"

வீரம், மானம், புகழ்பெற்ற வீரர்கள் சென்ற வழியில் நடத்தல், அரசின் நம்பிக்கையைப் பெறுதல் ஆகிய நான்கும் ஒரு படையைப் பாதுகாக்கும் சிறந்த பண்புகள் ஆகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நாகர்கோயிலிலே காங்கிரஸ்காரர்கள் அடிக்கப் பட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அனுமதி மறுத்ததைப் பற்றி இங்கே நீங்கள் பேசவேண்டாம்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. போளூர் வரதன் அவர்கள் (குறுக்கீடு) குமரி அனந்தன் வேண்டாம், இப்போது அந்த வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) அதை இப்போது எழுப்புவது முறையல்ல. திரு. போளூர் வரதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்

வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை பற்றி.. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல. அதுபற்றி, முறையாக நீங்கள் என் கவனத்திற்கு எழுதிக்கொடுத்துவிட்டு, நீங்கள் செய்யலாம். இதில் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுகிற எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. திரு. போளூர் வரதன் (குறுக்கீடு) நான் திரு. போளூர் வரதன் அவர்களை அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) அதற்கு முறைப்படி எழுதிக் கொடுங்கள்.

திரு. குமரி அனந்தன் : என்னுடைய உரிமைப் பிரச்சினை என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் உரிமைப் பிரச் சினையா ? அதை நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தேன். இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லை. காவல் துறை மானியக் கோரிக்கை எடுக்கிறகாரணத்தினால் நாளை எடுத்துக்கொள்ளலாம்.(குறுக்கீடு) அந்த வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே இன்றைக்கு எடுக்க வில்லை. (குறுக்கீடு) நேற்றைய தினம் எடுப்பதாகச் சொல்லி யிருந்தேன். நேற்று அந்த வாய்ப்பு இல்லை. இன்றைக்கும் கேள்வி நேரம் இல்லை. நேரடியாக நாம் அலுவல்களுக்குச் செல்கின்ற காரணத்தினாலே நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

2. கவன ஈர்ப்பு.

(அ) செம்பரம்பாக்கம் ஏரியின் ஆயக்கட்டிலுள்ள விவசாய நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. போளூர் வரதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.